**மாத்தளை மாநகர சபை**

**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி மாநகர சபையின் நகர முதல்வருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) பெறவேண்டிய முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 2,825,440 தொகை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 15,888,399 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சந்தைத் தொகுதியில் ஒரே தடவையில் செலுத்தும் கட்டண வருமானம் ரூபா 14,094,990 தொகையும், நிர்மாண உதவிப்பண பெறுமதி ரூபா 5,087,601

தொகையும், வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 980,000 தொகையும் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 117,822 தொகை மற்றும் ரூபா 169,457 தொகையான ஆயுர்வேத மருந்து இருப்பின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிப் பெறுமதி ரூபா 968,787 தொகை என்பன அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) சுன்யா செயற்திட்டத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,918.284 தொகை அக்கணக்கில் கணக்கீடு செய்யப்படாது அபிவிருத்திக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 42 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 139,000 தொகையான ஊழியர் பிணை வைப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த டிபர் வாகனம், பெரிய கெப்வண்டி மற்றும் உழவு இயந்திரத்தின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிலும் கடந்த 03 ஆண்டுகளிலும் 11 சந்தர்ப்பங்களின் போது வியாபார அனுமதிப்பத்திரங்கள், வியாபார வரி அல்லது களியாட்ட வரியாகக் கிடைத்த ரூபா 132,500 தொகையான வருமானம் சீராக்கப்படாது வைப்பாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2010 ஆம் அண்டில் ஹொக்கி விளையாட்டு மைதானத்தில் பாதுகாப்பு வலையைப் பொருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 350,000 தொகை அந்த வருடத்தின் போதே மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தொடர்ந்தும் வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 68,643,485 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 15,421,201 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,232,413 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 5,514,124 கூட்டுத்தொகையான 02 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 123,077,753 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சிய ரூபா 61,748,803 தொகையான 04 மீதிகளும் அதில் உள்ளடங்கி உள்ளது.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16,903,615 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1997 முதல் 2013 ஆம் ஆண்டு வரை 17 சந்தர்ப்பங்களில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 335,623 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | ரூபா 2,579,741 கூட்டுத்தொகையான 69 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத 23 பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், படிகள் பெற்றுக் கொண்டிருந்த 5 வாகன கட்டுப்பாட்டாளர்களுக்கும் 11 முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கும் நிரந்தர பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவு

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,503,620 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,773,038 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 16,269,418 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டு காலப்பகுதியிலும் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மொத்தச் செலவினத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாக எடுப்போமாயின் இந்த சதவீதம் உயர்வடைந்து செல்வதைக் காண்பித்ததுடன் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலையொன்று அதன் மூலம் காண்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 33,561,458 தொழிற்படு மூலதன பற்றாக்குறையான நிலையில் காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டைவிட ரூபா 8,728,295 இனால் அதிகரித்திருந்தது.

(இ) நடைமுறைச் சொத்து விகிதத்தைக் கவனத்தில் கொள்ளும் போது நடைமுறைப் பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு போதியளவான மட்டத்தில் நடைமுறைச் சொத்துக்கள் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) திரண்ட நிதியத்தின் மீதி தொடர்ந்தும் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது தொடர்ச்சியாக அதிகரிக்கும் பெறுமதியினால் அதிகரித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 ஆதனவரி

நிலுவையாக இருந்த ஆதனவரி மீதி ரூபா 23,966,803 ஆக இருந்ததுடன் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக போதியளவான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமையினால் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படும் ரூபா 10,568,111 மீதி அதில் உள்ளடங்கியிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.3.2 நீர்க் கட்டணம்

2001 ஆம் ஆண்டு முதல் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படுகின்ற தேசிய நீர்வள சபையிலிருந்து அறவிட வேண்டியிருந்த நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா 4,802,812 ஆகும்.

### 2.3.3 வாடகை

நிலுவையாக இருந்த வாடகை மீதி ரூபா 3,679,075 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருட காலத்தை விஞ்சிய ரூபா 711,312 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.3.4 ஒரே தடவையில் செலுத்தும் கட்டணம் (Key - Money)

கடைத் தொகுதியில் ஒரே தடவையில் செலுத்தும் கட்டண நிலுவை மீதி ரூபா 15,318,499 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் வருமானமொன்றிற்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 9,870,827 தொகையான நிலுவை மீதியும் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,604,950 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 13,732,530 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

**2.4 மிகைக் கட்டணம்**

---

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 226(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 41,859 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாநகர சபையினால் மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருட்களை தரம்பிரிக்கும் நிலையமொன்றை நிர்மாணித்தல், மாட்டு அறுவைக் கடமொன்றை நிர்மாணித்தல், காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் வடிவமைப்பதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம்பளம் மற்றும் வேதனச் செலவினம் ரூபா 144,643,766 ஆக இருந்த போதிலும் மாகாண சபையிலிருந்து அதில் ரூபா 109,517,612 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தமையினால் ரூபா 35,126,154 தொகையான சம்பளம் மற்றும் படிகளுக்காக சபை நிதியத்திலிருந்து செலவிட வேண்டியேற்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாநகர சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 138,538 தொகையான 06 மதிப்பிழந்த காசோலைகளை சரியாக இனங்கண்டு கணக்குகளில் உரிய சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலக செயலாற்றல் போட்டியில் பரிசு கையளித்தல் வைபவத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட ரூபா 190,000 தொகையான மானியம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தில் மருந்து கலக்கும் பதவிக்காக அலுவலக உதவியாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்தகத்தின் ஊழியரும் மாநகர சபையில் வேறொரு பிரிவில் சேவைக்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) நிதி மீளளிப்புச் செய்யப்படாமல் உடற்பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 992,700 செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் எதுவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 முதல் 2007 வரையான காலப்பகுதியில் 17 சந்தர்ப்பங்களின் போது வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 345,670 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுள்ள ஊழியர் ஒருவருக்கு 17 மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 87,119 கூட்டுத்தொகையான வெளிநாட்டு ஓய்வூதிய நிதி தீர்க்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) அமையத் தொழிலாளர்களாக சேவை செய்து நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களுக்காக 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 985,539 தொகையான பங்களிப்புப் பணம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத்திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கிடைத்திருந்த 749 விண்ணப்பங்களில் 502 இற்காக அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அதில் 49 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) 1999 முதல் 2003 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது இடமாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச்சென்ற 132 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,072,483 கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தமகாவா விடுமுறை விடுதி மற்றும் அம்பகஹமுல சந்தைத் தொகுதி அமைந்துள்ள காணியின் உரித்து உரித்துறுதியின் மூலமோ அல்லது கையளித்தல் கட்டளை மூலமோ உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) காணியின் உரித்துறுதி, கையளித்தல் கட்டளையின் பிரகாரம் மாநகர சபைக்குச் சொந்தமான 13 காணிகளை பௌதீக ரீதியில் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2002 ஆம் ஆண்டு முதல் ஹோட்டல் பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக வியாபார, வணிக மற்றும் சுற்றுலாத் திணைக்களத்திற்கு காணியின் ஒரு பகுதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் வருமானமொன்றை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அகில இலங்கை பௌத்த பெண்கள் சம்மேளனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிப் பகுதியிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 20,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 7,755,414 கிரயமான 10 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் செயற்பாடற்ற கொங்கிரீட் கல் செயற்திட்டத்தின் ரூபா 179,580 பெறுமதியான 5986 கொங்கிரீட் சிறு கற்களும் ரூபா 787,056 பெறுமதியான 16,397 கொங்கிரீட் கற்களும் ரூபா 168,789 பெறுமதியான கொங்கிரீட்கல் உற்பத்தி இயந்திரமொன்றும் பயன்பாடின்றிக் காணப்பட்டன.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

2012 ஆம் ஆண்டின் போது ஊழியர்களின் சீருடைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 157,500 பெறுமதியான 60 அங்குல அகல செம்மஞ்சல் நிறமான 375 மீற்றர் துணி, விநியோகிக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

நிதிப்பிரமாணம் 610 இன் பிரகாரம் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரிக்காமல் மாத்தளை மாநகர சபையினால் அரச சார்பற்ற நிறுவனத்துடன் நேரடியாக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஐரோப்பிய சங்கத்திடமிருந்து ரூபா 10,204,165 வெளிநாட்டு நிதியுதவி பெறப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முடிவடையும் போது உரிய செயற்பாடுகளுக்கான செலவினங்களைச் செய்வதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் சுன்யா செயற்திட்டத்திற்குரிய வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 5,132,798 தொகையான மீதியொன்று செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1991 முதல் 2013 வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் தாமதமாக அனுப்பியமையால் ரூபா 111,078 மிகைக் கட்டணமொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) ஆகக் குறைந்த கூறுவிலையின் அடிப்படையில் பாடசாலைப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்படாமையினால் சபைக்கு ரூபா 57,480 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட 20,329 புத்தகங்கள் முறையான திட்டமொன்று பின்பற்றப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 80,175 பெறுமதியான புத்தக இருப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) வாரியபொலவத்த என்ற பெயருடைய தனியார் காணியில் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டமையால் அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பாக சபைக்கு எதிராக எஸ்.சீ.எப்.ஆர்.290/2008 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தது. 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரை சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 1,855,818 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் வழக்கு முடிவடைந்திருக்கவில்லை.

## 3.8 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | நிதிஏற்பாடு | வேலையின் பெயர் | செலவிடப்பட்ட தொகை | பௌதீகப் பரிசோதனைத் திகதி | குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | கிராமிய பாலங்கள் மற்றும் நுழைவு வீதி அபிவிருத்தி மானியம் | எம்.சீ. கிரவல் வீதி விளையாட்டரங்கு முன்பக்க நுழைவு வீதியின் எஞ்நிய பகுதியை அபிவிருத்தி செய்தல் | 394,000 | 2015.01.13 | (i) 1:2:4($^3/_4$) கலவையில் 0.125 மி.மீ தடிப்பத்தில் கொங்கிரீட் இடப்பட வேண்டிய போதிலும் கொங்கிரீட்டின் தடிப்பம் 0.0889 மி.மீ ஆகக் காணப்பட்டது. <br> (ii) 27.5 கனமீற்றர் கொங்கிரீட்டிற்காக ரூபா 352,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 18.9 கனமீற்றர் கொங்கிரீட் மாத்திரம் போடப்பட்டுள்ளமையால் 8.6 கன மீற்றருக்காக ரூபா 110,080 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | கமநெகும அபிவிருத்தி மானியம் | பிள்ளையார் கோயில் வீதியின் டயனா தொழிற்சாலை அருகிலிருந்து பிரதான வீதி வரை இருபக்கமும் வடிகாண் | 980,000 | 2015.01.13 | (i) வேலை விடய இல. 03 இன்கீழ் வடிகாண் முறைமை நிர்மாணிக்கும் போது 9 அங்குலத்திற்கு 9 அங்குலமாக 10 மி.மீ. கம்பி இட்டு கொங்கிரீட் |

| | | |
|---|---|---|
| முறைமை நிர்மாணித்தல் | | கூடு அமைக்கப்பட வேண்டிய போதிலும் 8,10,11 மற்றும் 12 அங்குல இடைவெளியில் கம்பி இட்டு கூடு அமைக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | வேலை விடய இல. 02 இன் கீழ் வடிகாண் முறைமை நிர்மாணிப்பதற்காக 1:2:4 கலவை பயன்படுத்தப்பட வேண்டிய போதும் 1:12:15 கலவையில் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. |

## 3.9 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 28 தொன் அளவிலான கழிவுப் பொருள் அளவில் 5-6 தொன்களுக்கிடையேயான அளவு செவனத என்ற பெயருடைய தனியார் நிறுவனமொன்று கூட்டுப்பசளை உற்பத்திக்கு பயன்படுத்தியிருந்ததுடன் எஞ்சிய கழிவுகள் வாரியபொலவத்த என்ற பெயருடைய காணியில் அகற்றப்பட்டு பரவப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கழிவுப் பொருள்களை பரவல்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட எக்ஸ்கெவேட்டர் இயந்திரத்திற்காக ரூபா 3,616,166 தொகை வாடகை கட்டணமாக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட கூட்டுப்பசளை விற்பனையின் மூலம் தனியார் நிறுவனமொன்று வருமானம் உழைத்திருந்த போதிலும், மாநகர சபை எவ்வித வருமானத்தையும் பெற்றிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------------

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------------

1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உப விதியின் III ஆவது பகுதியின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபையில் சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வு முறைமையொன்று பேணப்படாதிருந்ததுடன் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்

134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) 18 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 2 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 27 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 30,523,700 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 71 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 01 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

## 4.4 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களில் 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 17,404,219 ஆகும்.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) ஒப்பந்த நிருவாகம்

(எ) மனிதவள முகாமைத்துவம்